சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.125/2020

15.04.2026

பி.வா.சா.1 திரு. கோவிந்தராஜன், த/பெ. ராமசாமி

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது தாய் வழி பாட்டனார் பெயர் சிங்காரு மேஸ்திரி என்றால் சரிதான். அவருடன் பிறந்தவர் ரெத்தினம் மேஸ்திரி என்றால் சரிதான். ரெத்தினம் மேஸ்திரியின் மகன் பெயர் கண்ணுசாமி என்றால் சரிதான். கண்ணுசாமியின் மகன்கள் சேகர், தெட்சிணாமூர்த்தி மகள்கள் சகுந்தலா, ஜெயலெட்சுமி, அஞ்சம்மாள், சித்ரா என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் மாரியம்மாள், ரவிசங்கர் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்.3/17 ஆகும். அதன் மொத்த விஸ்தீரணம் 33 செண்ட் என்றால் சரிதான். 29.10.1979 ல் தன்னுடைய பாகத்தை பொறுத்து சிங்காரு மேஸ்திரி தனது அண்ணன் மகனான கண்ணுசாமி மேஸ்திரிக்கு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் சொத்துக்களை சிங்காரு மேஸ்திரியும் ரெத்தினம் மேஸ்திரியும் கிரயம் வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் நஞ்சை சொத்தை கிரயம் பெற்றுள்ளார்கள். என்னிடம் காட்டப்படும் விடுதலைப்பத்திரத்தில் சிங்காரு, ரெத்தினம் இருவரும் கிரயம் பெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அப்போது எனக்கு 14 வயதுதான் இருக்கும். கிரயம் பெற்ற சொத்துக்களை விடுதலை பத்திரம் செய்துக்கொடுத்த பின்னிட்டு எனது தாயாருக்கோ எனது சகோதர சகோதரிகளுக்கோ உரிமையில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் சொந்த ஊர் தேதியூர். எனது தந்தையின் சொந்த ஊர் தேதியூர் இல்லை என்றாலும் மயிலாடுதுறை மாவட்டம், கோமல் கிராமம் என்றால் சரியல்ல. சிங்காருவிற்கு ஒரே மகள் மாரியம்மாள் என்றால் இல்லை. சிங்காருக்கு ஆண்டாள், பட்டு என்ற இரண்டு மகள்கள் உள்ளார்கள். ஆண்டாள் குத்தாலத்தில் திருமணம் செய்துக்கொடுக்கப்பட்டார் என்றால் இல்லை. ஆண்டாளை குத்தலாத்தில் தான் திருமணம் செய்துக்கொடுத்தார் என்றாலும் வழக்கிற்காக நான் அதை மறுக்கிறேன் என்றால்சரியல்ல. சிங்காருவின் மற்றொரு மகள் பட்டு சோழம்பேட்டையில் திருமணம் செய்துக்கொடுக்கப்பட்டார் என்றால் சரிதான். ஆண்டாள் திருமணம்

செய்து கொடுக்கப்பட்டு பிரச்னை ஏற்பட்டு தான் தேதியூருக்கு வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் நான்கெல்லை தெற்கே - தேதியூர் ரோடு, வடக்கே - விஷ்ணுபுரம் வாய்க்கால், கிழக்கே - ராமசாமி ஓட்டுவீடு, மேற்கே - நடப்பு சந்து உள்ளது. விஷ்ணுபுரம் வாய்க்காலை ஒட்டி 5 ஆம் பிரதிவாதி வசித்து வருகிறார் என்றால் சரிதான். 5 ஆம் பிரதிவாதி வீட்டிற்கு கிழக்கே 1 ஆம் வாதி ஆர்.சி.சி. வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல, கூரைவீடு தான் உள்ளது. 5 ஆம் பிரதிவாதி குடியிருக்கும் வீட்டிற்கு தெற்கே 1 ஆம் வாதி குடியிருந்து வரும் கூரை வீடு உள்ளது என்றால் சரிதான். 1 ஆம் வாதி குடியிருக்கும் வீட்டிற்கு கிழக்கே உள்ள ஓட்டு வீட்டில் தான் ஆண்டாள் இருந்தார் என்றாலும் தற்போது மாரியம்மாள் குடியிருந்து வருகிறார் என்றாலும் சரியல்ல, நான்தான் குடியிருக்கிறேன். அந்த ஓட்டு வீட்டிற்கு தெற்கே ரவிசங்கர் ஆக்கிரமித்து வசித்து வருகிறார் என்றால் வீடு கட்டியுள்ளார். 2 ஆம் பிரதிவாதி கட்டியுள்ள வீட்டிற்கு கிழக்கே 3 ஆம் பிரதிவாதி ஆர்.சி.சி வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். 3 ஆம் பிரதிவாதி வீட்டிற்கு தெற்கே மாரியம்மாள் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். ஒவ்வொரு வீடும் சுமார் 500 சதுரடி இருக்குமா என்றால் இருக்கும்.

**வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.